சேரன்மாதேவியில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் பணி

5—(*வினா எண். 3280) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கீழ் கண்டவினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி' சேரன்கோவில்பத்து, அண்ணா நகர் பகுதிகளில் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டான 1986—87க்குள் கட்டி முடிக்கப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்கோயில்பத்து பகுதியில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்படும் இந்த வீடுகள் நீண்டகாலமாக தாமதப்பட்டு வருகிறது. அதற்கான காரண காரியங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் தொகுதியில் இந்தக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இந்தக் கட்டிடங்களுடைய அடித்தளங்கள் எல்லாம் களிமண்ணாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அது மறுபரிசீலனை செய்யப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் அவற்றைக் கட்டி முடிக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கென வீடு கட்டும் திட்டத்தில் கிறிஸ்துவர்களுக்கு இல்லை என்பதாக அரசாணை பிறப்பித்துள்ளதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், ஏழை ஆதிதிராவிட கிறிஸ்தவர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து என்னிடத்திலே தகவல் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.